விலை சதம் 5

இரண்டாம் பதிப்பு

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமீயாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ	6-00
6 மாதச் சந்தா		12-00
1 வருடச் சந்தா	,,	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி 2உ ஞாயிற்றுக்கிழமை | Colombo, October, 19, 1947 | ஹிஜிரி 1366 துல் ஹஜ் பிறை 4 | இதழ் 138

அரசாங்க குமாஸ்தாக்கள் மீது புதிய நடவடிக்கை

பிரதம மந்திரி தலையிட மாட்டாராம்!

எதிர்க் கட்சிகளின் கோரிக்கைக்கு திரு. சேனநாயக்கா கை விரிப்பு

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 18—

சென்ற ஜூன் மாதத்தில் வேலை நிறுத்தம் செய்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இப்பொழுது அரசாங்கம் தண்டனை விதிக்க முனைந்து நிற்பதாகக் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவைப் பேட்டி கண்டார், திரு. சேனநாயக்கா இது விஷயம் பப்ளிக் ஸெர்வீஸ் கமிஷனதே என்றும், அக்கமிஷனர்களது வேலையில் தாம் தலையிட்டுக்கொள்ள முடியாதென்றும் கூறிவிட்டார்.

டாக்டர் பெரேரா பாராளுமன்ற எதிர்க்கட்சியினர் 43 பேரால் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒரு கடிதத்தை திரு சேனநாயக்காவுக்குக் காட்டினார். அக்கடிதத்தில் சமீபத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை பாராளுமன்றத்தில் அதுவிஷயம்பற்றி ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளுமவரை நிறுத்திவைக்குமபடி கோரப்பட்டிருந்தது.

டாக்டர் பெரேரா வேலை நிறுத்தம் சம்பந்தமாக அரசாங்க ஊழியர்கள் மீது நடவடிக்கையெடுக்கும் விஷயம் பப்ளிக் ஸெர்வீஸ் கமிஷனர்கள் செய்யும் காரியமல்லவென்றும் மந்திரிகளே அதையிட்டுப் பரிசீலனை செய்துகொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

திரு. சேனநாயக்கா, டாக்டர் பெரேரா கூறியதற்குச் சம்மதம் காட்டியுள்ளாரென்றாலும் பப்ளிக் ஸெர்வீஸ் கமிஷன் என்னும் அரசாங்க வேலையாளர் சபையின் விஷயங்களில் தாம் தலையிட முடியாதென்றும் கூறியுள்ளாராம்.

அரசாங்கச் சேவையாளர் லீக் மந்திரி சபையினரிடமிருந்து அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பூரண தொழிற்சங்க உரிமைகள கோருவதாக அறியப்படுகிறது.

தற்காலிகமாகக் கடமையாற்றிய அரசாங்கத் தொழிலாளர் பலர் சென்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக வேலையினின்றும் அகற்றப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக அரசாங்க தற்காலிக வேலையாளர் யூனியன் அக்டோபர் மாதம் 21-ம் தேதி ஒரு கமிட்டிக் கூட்டம் வைக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

கூட்டத்தில் அரசாங்க சேவையாளர் லீக்குடன் சேர்ந்துதங்கள் உரிமைகளைப் பெறுவது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்படுமென அறிகிறோம்.

தற்காலிக குமாஸ்தாக்கள் வேலை நீக்கம்

வேலை நிறுத்தம் செய்யாதவருக்கு நிரந்தர வேலை

பொக்கிஷ இலாகா சுற்றறிக்கை

கொழும்பு, அக் 18

கடந்த மே மாதம் நடைபெற்ற குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாது விலகி இருந்த தற்காலிக குமாஸ்தாக்களுக்கு நிரந்தர வேலைகொடுக்கும் திட்டம் ஒன்றைப் பொக்கிஷ இலாகா தனது சுற்றறிக்கையொன்றில் சிபார்சு செய்திருக்கிறது. இக்குமாஸதாக்கள் ஜெனரல் கிளெரிக்கல் சேர்வீஸ் அல்லது அஸிஸ்டன்ட் கிளெரிக்கல் சேர்வீஸ் அந்தஸ்தைப்பெறுவார்கள்.

இதில் சேர்த்துக்கொள்ளப்படாதவர்கள் எல்லோரும் நோட்டீஸ் கொடுத்து வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

"பப்ளிக் சேர்வீஸ் லீக்" என்னும் அரசாங்க ஊழியர் சங்கம் இந்த சுற்றறிக்கை பற்றி ஆலோசிக்கவும், கடந்த வேலை நிறுத்தத்திற்காகப் பழிவாங்கப்பட்ட குமாஸ்தாக்கள் சம்பந்தமாக ஆலோசிக்கவும் இன்று ஒரு கூட்டம் கூடுவதாக அறியப்படுகிறது.

ஆங்கிலோ-பர்மா ஒப்பந்தம்

கைச்சாத்திடப்பட்டது

லண்டன், அக். 17

ஆங்கிலோ-பர்மா உடன்படிக்கையில் பிரிட்டன் சார்பாக அட்லியும் பர்மா சார்பாக தக்கின் நுவும் கைச்சாத்திட்டுவிட்டனர். அதன்பிறகு இன்று பர்மா பிரதமர் தக்கின் நு அரண்மனையில் மன்னரைச் சந்தித்தார்.

ரங்கூன் நகர சபை

ரங்கூன், அக். 17

ரங்கூன் நகர சபை நிர்வாகத்தை சர்க்கார் கைப்பற்றிக்கொண்டார்கள். நகர சபை மேயர் ஊசோ நியும் அமெரிக்காவில் பர்மா ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுவிட்டார். நகர நிர்வாகம் செய்ய நகர சபையில் பணமில்லாதபடியால் நிலைமை சீர்திருந்தும்வரை நகர சபையை சர்க்காரே நிர்வகித்து வருவார்கள்.

கொலை வழக்கு விசாரணை

ரங்கூன், அக். 17

பர்மா மந்திரிகள் கொலை வழக்கு விசாரணை இன்று தொடர்ந்து நடைபெற்றது. வழக்கில் சர்க்கார் தரப்பில் சாட்சியங்கூற முன்வந்த எதிரி பா நியுன் இன்று சாட்சி கூறிய போது முதல் எதிரி ஊ சா பர்மாவிலுள்ள எதிர்க்கட்சிகளை ஒழித்து எதிர்க் கட்சிகளின் தலைவர்களைக் கொல்லுவதற்குத் திட்டம் போட்டிருந்தார் என்று கூறினான். பா நியுன் சாட்சியம் முடிவுறவில்லை. விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ராய்ட்டர்)

பாரிஸ் கூட்டத்தில் கலகம்

வேலை நிறுத்தங்களால் நெருக்கடி

யுத்த நஷ்டஈடு திட்டம்; ஜெர்மனியர் ஆத்திரம்

பாரிஸ், அக் 17

நேற்றிரவு ஜெனரல் டி கால் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது கம்யூனிஸ்டு கட்சியினருக்கும் டி கால் கட்சியாருக்குமிடையே கலகமேற்பட்டது பலர் காயமடைந்தனர்.

பாரிஸில் வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க ஆள் திரட்டுவதற்காக சர்க்கார் பல இடங்களில் துருப்புகளை நிறுத்தினார்கள். முக்கிய தொழிற்சாலைகளைத் தகர்க்க சதி நடைபெறுவதை அறிந்து அங்கும் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது.

வேலை நிறுத்தம் செய்யும் மாலுமிகளுக்கும் சர்க்காருக்குமிடையே சமரச ஒப்பந்தம் ஏற்படுவிட்டதாகத் தெரிகிறது. 15 சதவிகித சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது ஞாயிறு அல்லது திங்கட்கிழமை மாலுமிகள் வேலைக்குத் திரும்புவார்கள்.

லண்டன் உணவுக்குத் திண்டாடும்

லண்டன், அக். 17

சம்பள உயர்வு கோரி 3000 துறைமுகத் தொழிலாளர் இங்கட்கிழமைமுதல் வேலை நிறுத்தம்செயயத் தீர்மானித்திருக்கிறார்கள். 580 உணவு ஸ்டோர் சிப்பந்திகள் தொடர்ந்து 3 தினங்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் லண்டன் வாசிகள் உணவுக்குத் திண்டாடும் நிலைமை ஏற்பட்டுவருகிறது.

கிரேக்க கம்யூனிஸ்ட் பத்திரிகை

ஏதென்ஸ், அக். 17

கிரேக்க கம்யூனிஸ்ட் பத்திரிகையான ரிசாஸபாடிக் பத்திரிகையின் பிரதிகளனைத்தையும் இன்று போலிசார் கைப்பற்றினர். கிரேக்க தேச பக்தர்கள் கிரேக்க கொரில்லாக்களுடன் சேரும்படி ஜெனரல் மார்க்கோஸ் செய்த ரேடியோப் பிரசங்கத்தை அப்பத்திரிகை வெளியிட்டிருந்தது. அப்பத்திரிகாசிரியர் கிரீஸிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி கோஷ்டித் தலைவர் கிரிஸ வோல்டைதாக்கி யெழுதியிருந்ததால் நேற்று அப்பத்திராதிபருக்கு 18 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மூனிச்சில் அமெரிக்கர் முஸதீபு

பிராங்க்பர்ட், அக். 17

மூனிச்சிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் நகரின் முக்கியமான இடங்களைக் கைப்பற்றினர். அமெரிக்க குடும்பங்களிருக்கும் இடங்களை ராணுவம் பாதுகாவல் செய்து வருகிறது.

ஜெர்மனியர் ஆத்திரம்

ஹாம்பர்க், அக். 17

யுத்த நஷ்ட ஈடு சம்பந்தமாக ஜெர்மனியிலிருந்து தளவாடங்களை அடாபுறபடுத்த அமெரிக்கா, பிரிட்டன் வகுத்த திட்டத்தைக் கண்டித்து பிரிட்டிஷ் பிரதேசத்திலுள்ள ஜெர்மன் ஆலோசனைக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது. அங்குள்ள ராணுவ சர்க்கார் அறுமதிக்க ஜெர்மன் பார்லிமெண்ட நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாலஸ்தீனப் பிரச்னை

ஐக்கிய தேச கமிட்டியில் விவாதம்

ஜாபா அராபிய வாலிபர்களுக்கு வேண்டுகோள்

ஜெருசலேம், அக் 17

பாலஸதீனத்தின் இரண்டாவது துறைமுகப் பட்டினமான ஜாபாவிலுள்ள ஒவ்வொரு அராபிய வாலிபனும் தன் தாய் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு உடனே ராணுவத்தில் வந்து சேரும்படி ஒரு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது இவ்வேண்டுகோளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் நகரெங்கும் விநியோகிக்கப்பட்டன அதில் பாலஸதீன அராபியரின் ராணுவ ஸ்தாபனங்களான நஜாதா, பட்டுவா இவைகளின் கூட்டு ராணுவத் தளபதி முகமது ஹவாரி என்னும் பெயருள்ள ஒரு லாயர் கைச்சாத்திட்டிருக்கிறார். பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறப்போவதால் ஒவ்வொரு அராபிய வாலிபனும் ரத்தம் சிந்தத் தயாராக வேண்டுமென்றும் அந்நிய பிணவாங்குகிறவர்கள் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யூதர் தலைவர் அறிக்கை

நியூயார்க், அக் 18

ஐக்கிய தேச பாலஸதீனக் கமிட்டியில் இன்று யூத ஏஜன்ஸியின் அரசியல் தலைவர் ஷெர்ட்டாக் பின்வருமாறு தெரிவித்தார்:-

பிரிட்டன் இவ்வருடக் கடைசியில் பாலஸதீனத்தை விட்டு வெளியேறினால் அங்கு ஒப்பாராட்டம் ஏற்படலாகாது என்பது எனது பிரார்த்தனை. ஆனால் போராட்டம் ஏற்படின் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். பாலஸதீனப் பிரச்னையால் சர்வதேசங்களுக்கிடையே சச்சரவு ஏற்படும்படியான நிலைமை உண்டாகும். ஆதலால் ஐக்கிய தேச ஸ்தாபனம் உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டியதவசியம்.

பாலஸதீன தீர்மானம்பற்றி ஆலோசனை ஆரம்பிக்கப்படுமுன் அராபியத் தலைவர், யூதர் தலைவர் ஆகியோரின் இறுதியான அபிப்பிராயங்கள் கமிட்டியில் தெரிவிக்கப்படும்.

பாலஸதீனத்தைப் பிரிப்பதற்கு ஐக்கிய தேச ஸதாபனத்திற்கு அதிகாரமுண்டா என்பதைக்குறித்து சர்வ தேச கோர்ட்டின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எகிப்தும், சிரியாவும் இன்று தீர்மானம் கொண்டு வந்தன. அதுவரை பாலஸதீன பிரிவினை சம்பந்தமான விவாதங்களை ஒத்திவைக்கும்படி எகிபது தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது.

பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக அசெம்பிளியில் வோட் எடுக்கப்படும்போது மூன்றில் இரு மடங்கான மெஜாரிடி வோட்டுகள் கிடைக்குமா என்ற சந்தேகம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

(ராய்ட்டர்)

அதற்கு முன் அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதேசங்களிலுள்ள 682 தொழிற்சாலைகள் யுத்த நஷ்ட ஈடாக நிச்சயம் அபகரிக்கப்படுமென்று ஜெர்மன் மக்களுக்குக் கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தபால் நிலைய மேலதிகாரிகள் புகார்

அனுபவம் குறைந்தவர் முக்கிய பதவியில் அமர்த்தப்பட்டாரா?

கொழும்பு, அக். 18

உதவி போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் பதவியைத் தற்காலிகமாக நிர்வகிப்பதற்கு நீண்ட கால சேவையுள்ள ஒரு உத்தியோகஸதர் இருப்பதாகவும் அவரை விடுத்து அவரிலும் குறைந்த சேவையுள்ள ஒருவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனை எதிர்த்து தலைமை தபாற்தந்திக்காரியாலய உதவியோகஸதர் அடங்கிய தூதுக்கோஷ்டி ஒன்று தந்தி தகவல் மந்திரியின் நிரந்தர காரியதரிசியைப் பேட்டி கண்டு தனது கட்சியை எடுத்துரைத்தது. இத் தூதுக் கோஷ்டிக்கு பிரதம தந்திப் போக்கு வரத்து எஞ்சினியர் திரு. நடராஜா தலைமை வகித்தார்.

திறமையும் 30 வருட சேவையும் உள்ள ஒருவரே உதவிப் போஸ்ட மாஸ்டர் ஜெனரல் பதவியை வகித்து வந்து இருப்பதால் அதே மாமூலைக் தற்காலிக பதவி சம்பந்தமாகவும் அனுஷ்டிக்குமாறு அவர்கள் வேண்டினார்கள் தபால் சூப்ரண்டு விகடர் நிக்கொலஸ் முன்னர் ஒரு தடவை இப் பதவியை வகித்திருப்பதால் அவரை அப் பதவியில் அமர்த்துவது பற்றி ஆலோசிக்கும்படியும் அவர்கள் சிபார்சு செய்தனர்.

நிரந்தரக் காரியதரிசி திரு. பொன்னட் தூதுக்கோஷ்டி கூறிய விஷயங்கள் கவனிக்கப்படும் எனத் தெரிவித்ததாக அறிவிப்படுகிறது.

சிறையிலிருந்து வெளிவந்ததும் களவுசெய்ய முயற்சி

எதிரிக்கு இரண்டு வருடச் சிறை

கொழும்பு, அக் 19

குருநாகலையைச் சேர்ந்த வணி விதியிலுள்ள எல். எல். டி. அலவிஸ் என்பவர் கொட்டாஞ்சேனையில் செப்டம்பர் 30-ம் தேதி இரவு பி எஸ் முடியப்பு என்பவருடைய கடையில் புகுந்து திருட முயற்சிக்கையில் கடை சொந்தக்காரராலும் வேறு ஒருவராலும் கைது செய்யப்பட்டு போலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர் இதற்கு முன் எட்டு முறை குற்றங்கள் புரிந்துள்ளார்.

சிறையிலிருந்து விடுதலையாகி வந்ததும் களவு புரிந்துள்ளதாகக் கூறப்பட்டது. விசாரணை முடிவில் கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதித்தார்.

இளவரசி திருமண வைபவம்

பி. பி. ஸி மூலம் ஒலிபரப்பப்படும்

லண்டன், அக். 17

இளவரசி எலிஸபெத்துக்கும் லெப்டினண்ட் பிலிப் மவுண்ட் பேட்டனுக்கும் நவம்பர் 20-ம் தேதி திருமணம் நடைபெறும் அவ்வைபவம் சம்பந்தமாக வெஸ்ட மினிஸ்டர் அபேயில் நடக்கும் சடங்குகள் பி. பி. ஸி. மூலம் உலகெங்கும் ஒலிபரப்பப்படும் [ராய்ட்டர்]

இந்தியாவில் உள்ள முஸ்லிம் லீக்

அரசியல் ஸ்தாபனமாக இருக்கலாகாது

ஹுஸைன்பாய் லால்ஜீயின் உபதேசம்

பொறுப்பாட்சியை நிறுவுவதே சமஸ்தான மக்களின் முதல் கோரிக்கை என்கிறார் ஷேக் அப்துல்லா

பம்பாய், அக். 17

வியா முஸ்லிம்களின் அகில கட்சிகள் மகாநாட்டுத் தலைவர் ஹுஸைன்பாய் லால்ஜீ இங்கு இன்று பத்திரிகை நிருபர் கூட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவில் முஸ்லிம் லீக் சமூக சம்பந்தமானதும் மத சம்பந்தமானதுமான விஷயங்களில் கவனம் செலுத்தும் ஸ்தாபனமாக இருக்க வேண்டுமேயொழிய அது ஓர் அரசியல் ஸ்தாபனமாக இனி இருக்கலாகாது. இந்தியாவிலுள்ள முஸ்லிம்லீக் இனி இந்திய யூனியன் மீது விசுவாசங்காட்ட வேண்டுமேயொழிய பாகிஸதானை நினைத்துக்கொண்டிருக்கலாகாது. அந்நியர் உதவி கோரி பாகிஸதானை விடுத்த வேண்டுகோள் முறையற்றதாகும். அதனால் சிக்கலான பிரச்னைகள் மேலும் அதிகரித்து ஆசிய நாடுகள் அனைத்திற்குமே நாசத்தை உண்டுபண்ணும்

முதலில் பொறுப்பாட்சி!

புதுடில்லி, அக். 17

காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா அகில இந்திய சமஸதான பிரஜைகள் மகாநாட்டுக் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இங்கு வந்திருக்கிறார். பத்திரிகா நிருபரிடம் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் மக்களின் முக்கிய கவலை காஷ்மீரம் இந்திய யூனியனில் சேருவதா அல்லது பாகிஸதானில சேருவதா என்பதில்லை. காஷ்மீருக்கு உடனே ஜனநாயகப் பொறுப்பாட்சி வேண்டுமென்பதேயாகும்.

ஜுனாகத்

ராஜகோட்டை, அக். 17

ஜுனாகத் சமஸதான நவாபின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பாப்ரியாவாட் சமஸதானம் இந்திய யூனியனில் சேர்ந்திருக்கிறது. பாகிஸதானில் சேர்ந்திருக்கும் ஜுனாகத் சமஸதானம் இந்த பாப்ரியாவாட் சமஸதானத்திலுள்ள மூல கிருஷிகள் (நிலச்சுவான்தாரகள்) தங்கள் நிலங்களில் அறுவடையாகும் தான்யங்களையும் நிலவரியையும் ஜுனாகத் சமஸதானத்திற்குச் செலுத்த வேண்டுமென்றும் செலுத்தத் தவறினால் அவர்களை நிலங்களையும் வீடுகளையும் பறிமுதல் செய்து கிழக்குப்பஞ்சாப்பிலிருந்து வரும் முஸ்லிம் அகதிகளுக்குக் கொடுக்கப்படுமென்றும் உத்தரவிட்டிருக்கிறது.

ஹைதராபாத்

புதுடில்லி, அக். 17

ஹைதராபாத் சமஸ்தான தூதுகோஷ்டி நேற்று இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனைச் சந்தித்தது மூன்று மணி நேரம் சம்பாஷணை நடைபெற்றது. சமஸதான இலாக்கா காரியதரிசி திரு. வி. பி. மேனனும் இருந்தார் தூதுக்கோஷ்டி கொண்டு வந்துள்ள நகல் ஒப்பந்தம் ஹைதராபாத் இந்திய யூனியனில் சேருவதாக இல்லை. சமரசப் பேச்சில் நெருக்கடி ஏற்படுமென்றே தெரிகிறது. ஹைதராபாத் இந்திய யூனியனில் சேரவொட்டாமல் அங்குள்ள முஸ்லிம் அரசியல் கட்சி தீவிரமான முடுக்கட்டை போட்டு வருகிறது.

பாகிஸ்தானில் கட்டாய ராணுவப் பயிற்சி

கராச்சி, அக். 17

இன்று பாகிஸ்தானின் தூதுக்கோஷ்டியொன்று இங்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலைச் சந்தித்து 9 ஆலோசனைகளடங்கிய ஒரு ஜாபிதாவை சமர்பித்து அவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கோரினர் அவைகளில் சில பின்வருமாறு:- ஹிந்துஸ்தானத்தில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுவதால் அது சம்பந்தமாக பாகிஸ்தான் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். பாகிஸ்தானிலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும் ராணுவப் பயிற்சி ஸ்தாபனங்கள் நிறுவ வேண்டும். ஆயுதங்களை தயாரிக்க தொழில் சாலைகளை ஏற்படுத்தவேண்டும் பாகிஸ்தான் எங்கும் உடனே ஆயுதத் தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் பாகிஸ்தானுடன் எல்லா முஸ்லிம் நாடுகளும் கூட்டுறவாக இருக்கும்படி எல்லா முஸ்லிம் நாடுகளுக்கும் தூதுக்கோஷ்டி அனுப்பவேண்டும் இந்த யோசனைகள் மீது கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்வதாக கவர்னர் ஜெனரல் தூதுக்கோஷ்டிக்கு வாக்களித்தார்.

பாகிஸதானில் வரும் அகதிகளுக்கு நிவர்த்தியளிக்க ஜின்னாநிதி திரட்டப்படுகிறது. இதற்காக லண்டனில் பாகிஸ்தான் ஹைகமிஷனர் காரியாலயத்தில் ஒரு இலாகா திறக்கப்பட்டது. உடைகளும் மருந்துகளும் பண நன்கொடைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பாகிஸதானுக்கு அனுப்பிவைக்கப்படும். லண்டனிலுள்ள வர்த்தகர் ஹத்திம் அத்தாரி 500 பவுண் கொடுத்தார்.

பாகிஸதானில் காலராவைத் தடுக்க 2364 ஆயிரம் காலரா மருந்து ட்யூபுகளை லண்டனிலுள்ள பாகிஸதான் ஹைக் கமிஷனர் அனுப்பி வைத்திருக்கிறார்.

கிழக்குப் பஞ்சாப்பில் சென்ற இரு வாரங்களில் 1200 அகதிகள் காலராவாலும் வயிற்றுக் கடுப்பாலும் மாண்டனர். புதுடில்லியில் செப்டம்பர் 25-ம் தேதியிலிருந்து 104 பேர்கள் மாண்டனர்.

கிழக்குப் பஞ்சாப் சர்க்காருக்கும் மேற்கு பஞ்சாப் சர்க்காருக்கும் நடைபெற்றவரும் சமரசப் பேச்சின் பயனாக ஜன மாற்றம் அதிகமாக நடைபெறும் என்று தெரிகிறது. அகதிகள் முகாம்களில் பட்டினியும் காலரவும், சளைப்பும் அதிகரித்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 உ, நட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஸு ஐப்பசி மீ 2உ
ஞாயிற்றுக்கிழமை

பிரதம மந்திரி பிரசங்கம்

இப்பொழுது நாட்டுக்கு எந்த விதமான கல்வி, எவ்விதமான பட்டதாரிகள் அவசியம் என்பதைப்பற்றி இலங்கை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசிய பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா கூறியுள்ளார். விசாலமான போக்கில் வாய்ந்த கல்வி இன்று வேண்டுமென்கிறார். உயர்தர ஆக்மீக லட்சணங்களை மாத்திரமல்லாது நேர்மை, தேகாரோக்கியம், குண லட்சணங்கள்உலக அறிவு முதலானவற்றை அளிக்கும் முறையில் கல்வி அமைய வேண்டும் ஒரு ஆங்கில சர்வகலாசாலையில் வாசம் செய்வதினால் மாத்திரம் உள்ளூருக்குத் தேவையான விஷய அறிவை ஒரு மாணவன் அடைந்துவிட முடியாது. வெளியூர்ப் பட்டங்களுக்குப்படித்து சித்தியெய்துவதனாலும் ஒரு மாணவன் அறிவு பெற்றவனாகமாட்டான். படிப்பு, வாழ்க்கைக்குப் பலன் உள்ளதாக இருக்கவேண்டும். பெற்ற கல்வியுடன் ஒருவன் பொது வாழ்வில் பிரவேசித்தாலும் சரி, பிரவேசிக்காவிட்டாலும் சரி, அவன் கல்வியால் சமூகத்திற்கு நன்மையிருக்க வேண்டுமென்று திரு. சேனநாயக்கா சொல்லுகிறார். இது அத்தனையும் உண்மை. ஆனால் இன்றிருக்கும் கல்வி முறை இதற்கு நேர்மாறானதாக இருக்கிறது. இப்பொழுது இருக்கும் படிப்புக்கும் வாழ்க்கைக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமே கிடையாது. இக்காலப் படிப்பைப் பெற்றவர்கள் படிக்காத மற்றவர்களுடன் கலந்துகொள்ளமுடியாத ஒரு தனி இனமே தாங்கள் என்ற ஒரு விபரீத மனோபாவத்தையே அடைகிறார்கள். இதனால் பொது சமூகத்துடன் இவர்கள் சம்பந்தமில்லாதவர்களாகிறார்கள். இங்குள்ள கல்லூரிகளில் போதிக்கப்படும் கல்வி எந்த விதமாக நடைபெற்று வருகிறது என்பதைப் பார்ப்போமானால் அது தேசத்தின் பண்புக்கும், நாகரீகத்திற்கும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைக்கப்படவில்லை. இதன் பலனாக படித்துப் பட்டம் பெற்றவர்கள் கிடைத்தால் அரசினர் உத்தியோகம் அல்லது ஆசிரியத் தொழில்; இல்லாவிட்டால் வேறு ஏதுக்குமே உதவாமல் திண்டாடுவது. இதுதான் பட்டதாரிகள்முதல் படித்தவர்கள் எல்லோருடைய கதியாக இருந்துவருகிறது. சென்ற சில தினங்களுக்கு முன் ஒரு சர்வகலாசாலை மாணவன் திருட்டுத் தொழிலில் இறங்கியுள்ளான் என்பதைப் பத்திரிகைச் செய்தியில் நாம் படித்துள்ளோம். அவன் இத்தகைய தொழிலில் இறங்கியதற்குக் காரணமென்ன? ஒழுக்கத்தை வளர்க்காத கல்வியே! கண்ணியமாக நடந்து, சமூகத்துடன் வைத்துக்கொள்ளும் சம்பந்தங்களில் எல்லாம் யோக்கியமாக இருந்து வரவேண்டியதன் அவசியத்தை மாணவர்களுக்குப் போதிப்பதாக கல்வி இருக்கவேண்டும். கல்வியின் பிரதான நோக்கம், அறிவையும் திறமையையும் மாத்திரம் அதிகரித்துக்கொள்ளுவது என்பதல்ல. மக்கள் சரியாக நடந்துகொள்ளும்படி செய்ய அது உதவுவதாக இருக்கவேண்டும். படித்தவர்கள் பெற்ற அறிவும் திறமையும் பொதுஜன நன்மைக்கான சேவையில் பயன்படுவதாகவும் இருந்தால்தான் அந்தப் படிப்பு பலனுள்ள படிப்பு. இந்தக் காரியம் இன்றைய கல்வி முறையில் கிடையாது. இந்நிலைமை உடனே மாறவேண்டும். திரு. சேனநாயக்கா பதினாறு வருட காலமாக இலங்கையின் மந்திரிகளுள் ஒருவராக இருந்திருக்கிறார். இந்நிலைமையை மாற்றுவதற்கு என்ன செய்திருக்கிறார் என்று நாம் கேட்கிறோம். மேடைகளில் ஏறிப் பிரசங்கங்கள் செய்வது சுலபம்; அதிலும் எழுதி வாசிப்பது மகா சுலபம்.

இதுகாலை பரியந்தம் பிரிட்டிஷார் ஏற்படுத்திய கல்வி முறையின் நோக்கம், தங்களுடைய தேவைக்கு வேண்டிய குமாஸ்தாக்களை சிருஷ்டிக்க வேண்டுமென்பதே தவிர, சமூகத்திற்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்பதல்ல. இது காரணமாக படிப்பவர்களுடைய குறியெல்லாம் உத்தியோகத்தை அடைவது எப்படி என்ற ஒன்றிலேயே இருந்துவிட்டது. அதில் உயர்வையும் அதிக லாபத்தையும் அடைவது எப்படி என்பதே இவர்கள் எண்ணமாக இருந்துவிட்டதே ஒழிய, சமூகத்தை இவர்கள் சிந்திப்பதில்லை. ஒழுக்கத்தையும் சமூக சேவையையும் கல்வி வளர்த்திருக்குமானால் இப்பொழுது இருப்பதைப்போல லஞ்ச ஊழல்கள் இருக்காது. மக்களும் இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்க வேண்டி இராது.

யாதோ கடமையைச் செய்துவிட்டு, சீட்டாடவோ, டெனிஸ் விளையாடவோ சமயத்தில் நழுவிச் செல்வதில் நாட்டமுடைய அதிகாரிகளால் சமூகத்திற்கு பிரயோஜனமில்லை என்று குறிப்பிட்டுள்ளார் திரு. சேனநாயக்கா. அதிகாரிகள் தங்கள் வேலைகளை ஊக்கத்துடன் செய்பவர்களாயும், திறமையாய் நடப்பவர்களாயும் இருக்க வேண்டும். திறமை காட்டாது, சொன்ன வேலையை மாத்திரம் செய்துவிட்டு சும்மாவிருக்கும் ரகத்தைச் சேர்ந்த சிப்பந்திகள் எவரையும் சாதாரணமாக யாரும் விரும்புவதில்லை என்றும் சொல்லியுள்ளார் திரு. சேனநாயக்கா. அவர் பேச்சு எழுத்தளவில் உண்மை. ஆனால் எத்தனை அரசாங்க அதிகாரிகள் ஊக்கத்துடனும், திறமையுடனும் வேலை செய்த என்ற ஒரு குற்றத்திற்காக காடுகளுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர். இன்னும் வேலையினின்றும் நீக்கப்படுமிருக்கின்றனர். சும்மா விருந்தவன் வெற்றி சுவரேறி விழுந்தவன் சொத்தி என்ற நிலைமை இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர்களிடையே நிலவுவதற்குக் காரணமென்ன? அறிவுள்ளவர்கள், திறமையுள்ளவர்களைவிட்டு தமது சிநேகிதர், குடும்பத்தார் முதலியவர்களை வேலையில் மந்திரிகளும் மற்றவர்களும் நியமிப்பதாலேயே. இலங்கை அரசினரின் கீழ் ஸிவில் ஸேர்விஸ் பரீட்சையில் சித்தியெய்தி உத்தியோகம் பெறுபவர்கள் பொதுவாகத் திறமையானவர்கள்தான். ஆனால் சென்ற 16 வருடகாலமாக மந்திரிகள் சர்வாதிகாரம் செலுத்தத் தொடங்கியதும், மந்திரிகளுக்கேற்ப அவர்கள் தாளம்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை உடனே அகற்ற வேண்டியவர் திரு. சேனநாயக்காதான் என்பதை வற்புறுத்துகிறோம்.

மேலும் திரு. சேனநாயக்கா இலங்கையருக்கு உள்நாட்டுச் சரக்கில் அவ்வளவு விருப்பம் கிடையாது என்றும் கூறியிருக்கிறார். அவரின் ஆப்த நண்பன் ஸர். ஒலிவர் குணத்திலக்கா, இலங்கையை ஒரு சிறிய இங்கிலாந்தாக அமைக்க வேண்டும் என்கிறார். அத்தகைய ஸர். குணத்திலக்காவே இன்று சேனநாயக்காவால் உள்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த அளவில் இலங்கை மக்கள் எவ்விதம் சுதேசிப் பொருட்களை விரும்புவர்.

வாக்கிலொன்றும் செயலிலொன்றுமாக நடக்கும் திரு. சேனநாயக்கா போன்றவர்களின் மேடைப் பேச்சுக்களால் ஒருவித பயனையும் நாம் பெற முடியாது. மனிதனை அரசாங்க உத்தியோகத்திற்கு மாத்திரம் பிரயோஜனப்படும்படி கல்வி போதிக்கப்படுவதால்தான் சண்டை சச்சரவுகள் உண்டாகின்றன. உத்தியோக வேட்டையினால்தான் மனிதனை மனிதன் துவேஷிக்கவும், ஒரு ஜாதியை மற்றொரு ஜாதி துவேஷிக்கவும் ஏதுவாகின்றது. இந்த நிலை தேசத்திலிருந்து இந்த க்ஷணமே மாற வேண்டும். கலாசாலைகளிலும், சர்வகலாசாலையிலும், பல தொழில்களிலும் முன்னேற்றமடையும்படியான முறையில் அரசாங்கம் கல்வியை மாற்றியமைக்க வேண்டும். அம்மாதிரி மாற்றியமைக்கும் கல்வியானது ஜன சமூகத்திற்கு விவசாயம், வர்த்தகம், கைத்தொழில்கள், இயந்திரத் தொழில்கள், இன்னும் மற்ற துறைகளிலும் பயன்படக்கூடியவாறு அனுகுணமாக இருக்க வேண்டும். திரு. சேனநாயக்கா இவற்றைச் செய்ய சகல அதிகாரமும் தம்மிடத்தில் வைத்திருக்கின்றார். செய்வாரா என்பதை பொது மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மனித உரிமை பற்றி மகாத்மா

கடமையைச் செய்; உரிமைகள் கிடைக்கும்

எழுதப்படிக்கத் தெரியாத அறிவுள்ள தாயாரிடமிருந்து கற்றுக்கொண்ட படிப்பினை

ஐக்கிய தேச சஞ்சிகையில் காந்திஜியின் கடிதம்

நியூயார்க், அக். 17

ஐக்கிய தேச ஸதாபனம் வெளியிடும் வார சஞ்சிகையின் "மனிதனின் உரிமைகள்" என்னும் விஷயம்பற்றி மகாத்மா காந்தி எழுதியுள்ள கடிதமொன்று இன்று பிரசுரமாயிருக்கிறது.

ஐக்கிய தேச ஸ்தாபன கலாச்சாரக் கமிட்டியார், உலக நிலைமை பற்றி உலகிலுள்ள எல்லா பேரறிவாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும் தத்துவ ஞானிகளுக்கும் தத்தம் கருத்துகளை அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவ் வேண்டுகோளில் 60 கேள்விகள் கேட்டு அக் கேள்விகளுக்குப் பதிலனுப்பும்படி வேண்டிக்கொண்டிருந்தனர்.

60 கேள்விகளில் ஒன்றிற்கு மகாத்மா காந்தி பதிலளித்து "மனிதனின் உரிமைகள்" என்ற தலைப்பின் கீழ் அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:—

"ஒருவன் தன் கடமையைச் சரிவரச் செய்வானேயாகில் அவனே சகல உரிமைகளையும் அனுபவிக்கப்பாத்திரமாவதுடன் சகல உரிமைகளும் அவனுக்குக் கிடைக்கும். இந்தஉண்மையை-இந்தப் படிப்பினையை நான் எழுதப் படிக்கத் தெரியாத-ஆனால்பகுத்தறிவும் விவேகமுமுள்ளஎனதுதாயாரிடமிருந்து கற்றுக்கொண்டேன். ஒரு மனிதன் உலகில், தான் ஒரு பிரஜை என்பதை உணர்ந்து தனது கடமையைச் செய்வானேயாகில், அக்கடமையிலிருந்து அவன் உலகில் வாழ்வதற்கே உரிமை பெற்றவனாகிறான். இந்த பிரதானமான, மூலாதாரமான கோட்பாட்டிலிருந்து ஒரு மனிதனின் கடமைகளையும் அவைகளைச் சார்ந்துள்ள அவனது உரிமைகளையும் இன்னின்னவையென்று தெளிவாக விளக்கிவிடலாம். அதிலிருந்து மனிதன் என்னென்ன கடமைகளைச் செய்தால் என்னென்ன உரிமைகளை அடையலாம் என்பதைத்தெரிந்து கொள்ளலாம். மற்றப்படி மனிதன் கடமையை மறந்து உரிமையைக் கோருவானேயாகில், அது வியர்த்தமேயாகும். அப்படிப்பட்ட உரிமைக்காக அவன் போராடுவது அதிக்கிரமமாகும்."

இந்தக் கடிதம் ஐக்கிய தேச ஸதாபனத்தின் சஞ்சிகையில் மிகப் பிரபலமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இக் கடிதத்தை மகாத்மா காந்தி ஐக்கிய தேச கலாசாரக் கமிட்டிக் காரிய தரிசி டாக்டர் ஜூலியன் ஹக்ஸ்லிக்கு எழுதி அனுப்பியிருந்தார்.

"சிறிய அசெம்பிளி"

நியூயார்க், அக். 17

ஐக்கிய தேச அசெம்பிளியில், வருட முழுதுமிருந்து வேலை செய்ய 57 நாடுகளடங்கிய நிரந்தரக் கமிட்டி அதாவது சிறிய அசெம்பிளியை நிறுவுவது பற்றிஅமெரிக்காகொண்டுவந்த தீர்மானத்தை கொள்கையளவில் இந்தியா ஆதரிக்கிறது.

நேற்று பிரிட்டன் ஐக்கிய தேச அரசியல் கமிட்டியில் இது சம்பந்தமாக தனது திட்டத்தை சமர்ப்பித்தது. இந்த அசெம்பிளி முடிந்தபின் அடுத்த வருடம் அடுத்த அசெம்பிளி கூடும் வரை ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைக்க அச் சிறிய அசெம்பிளி வருட முழுவதும் நிரந்தரமாக இருந்து வேலை செய்ய வேண்டும்.

"சிறிய நூரம்பர்க்"

நியூயார்க், அக். 18

ஐக்கிய தேச சட்டக் கமிட்டியில் பாக்கிஸ்தான் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்தது:- உலகில் இன்னும் விசாரிக்கப்படாது சிறையிலிருந்து வரும் யுத்தக் குற்றவாளிகள் சம்பந்தமான பிரச்னையைத் தீர்த்துவைக்க ஒரு 'சிறிய நூரம்பர்க்' கோர்ட் நிறுவ வேண்டும். இந்தக் கோர்ட்டார் இவர்களைப்பற்றிய நிலைமையை ஆராய்ந்து அப்படிப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்ய அவரவர்கள் நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் யுத்தக் குற்றவாளிகளுக்கு அடைக்கலமளித்திருப்பதாக யூகோவும் உக்ரைனும் குற்றஞ்சாட்டியதை முன்னிட்டு பாக்கிஸ்தான் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறது.

எகிப்துக்கு பரிசுத்த பாப்பரசர் அனுதாபம்

கேட்டல்காண்டல்போ, அக். 17

வத்திக்கானில் எகிப்தின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஒமாரிபே இன்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்து தனது அத்தாட்சிப் பத்திரத்தை வழங்கினார். அப்பொழுது பாப்பரசர், எகிப்தில் காலராவால் ஏற்பட்டுள்ள அபாயம் நீங்க வேண்டுமென்று தான் விரும்புவதாகவும் எகிப்தின் எதிர்காலம் சுபீட்சமாக இருக்க வேண்டுமென்று விரும்புவதாகவும் தெரிவித்தார்.

அடுத்த யுத்தம் உலக அழிவு!

கான்பெரா, அக். 16

ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் இன்று பாதுகாப்புச் செலவுத் திட்டம் விவாதிக்கப்பட்டபோது ஆஸ்திரேலியப் ராணுவ மந்திரி திரு சிரில் சேம்பர்ஸ் பின்வருமாறு தெரிவித்தார்:-

உலகத்தில் இன்னும்கொஞ்ச காலத்திற்கு யுத்தம் தலை காட்டாது என்று பிரிட்டிஷ் ராணுவத் தலைவர் மாண்ட் கோமரி இங்கு வந்திருந்த போது தெரிவித்தார். அவர் கருத்து தவறாக இருக்கலாம். ஆனால் அவர் பல நாடுகளை நேரில் சுற்றிப் பார்த்து விஷயங்களை அறிந்தவர். இன்னொரு யுத்தம் நேரிடில் அணுகுண்டு பிரயோகத்தால் உலகமே அழிந்துவிடும். லட்சக்கணக்கான துருப்புகளிருந்தாலும் அணுகுண்டு முன்பு பயனில்லை, இப்பொழுது ஆஸ்திரேலியாவுக்கு நிரந்தரமாக 19,000 துருப்புகள் போதும் அவசரம் ஏற்பட்டால் அதிக துருப்புகளைத் திரட்டிக் கொள்ளலாம்.

ஐசன் ஹோவர் கருத்து

மான்செஸ்டர், அக். 17

அமெரிக்க ராணுவ தலைவர் ஜெனரல் ஐசன் ஹோவர் பின்வருமாறு தெரிவித்தார்:- இப்பொழுதுள்ள நிலையில் உலகில் எந்த நாடும், யுத்தம் தொடுக்கவும் முடியாது. யுத்தத்தைக் கிளப்பவும் முடியாது ஐக்கிய தேச ஸ்தாபனம் இதுவரை முன்னேற்றமான வேலைகளை இது சம்பந்தமாகச் செய்து முடிக்கவில்லை. ஆனால் ஐக்கிய தேச ஸதாபனம் தொடர்ந்து பாடுபட வேண்டும். ஒவ்வொரு அமெரிக்கனும் இன்று இரு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சங்கடப்படுகிறான். ஐரோப்பா பட்டினியால் சாவாது காப்பாற்ற உணவும் மற்றப் பொருட்களும் அனுப்பிவைக்கும் முயற்சி ஒன்று; இரண்டாவதாக பலாத்காரத்தால் உலகை ஆக்கிரமிக்க விரும்பும் ஒரு வல்லரசின் கொட்டத்தை அடக்கும் முயற்சி. (ராய்ட்டர்)

லண்டனில் ஸ்டெர்லிங் பாக்கிபற்றி பேச்சு வார்த்தை

இலங்கை நிதி மந்திரியும் கலந்துகொள்ளக்கூடும்

கொழும்பு, அக். 19

இவ்வருட முடிவில் லண்டனில் ஸ்டெர்லிங் பாக்கிகள் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடக்க இருக்கின்றன. இலங்கையும் இந்தஸ்டெர்லிங பாக்கிகள் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில் சிரத்தை கொண்டிருப்பதால் லண்டனில் நடக்க இருக்கும் இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது இலங்கையையும் பிரதிநிதிகளை அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப்படலாமென்று தெரியவருகிறது. பிரதிநிதிகளை அனுப்பும் விஷயத்தில் இலங்கை சர்க்கார் ஒருவிதமான முடிவுக்கும் வரவில்லை என்றாலும், இப்பேச்சு வார்த்தைகளில் இலங்கை கலந்துகொள்ள வேண்டுமென்னும் அவசியம் ஏற்பட்டால் நிதி மந்திரி திரு. ஜே ஆர். ஜெயவர்தனா தெரிந்தெடுக்கப்படுவார் என்றும் அவருக்கு உதவியாக ஸர். ஒலிவர் குணதிலகாவும் லண்டன் செல்வார் என்றும் கூறப்படுகிறது.

வெள்ள நிவாரண நிதிக்கு 100 பவுண் நன்கொடை

அயர் ஆஸ்பத்திரி தர்மகர்த்தா லிமிடெட்டின் அனுதாபம்

கொழும்பு, அக். 19

ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அதிக சேதங்கள் ஏற்பட்டிருந்தன. நிவாரண நிதியொன்றை கவர்னரும் ஆரம்பித்து வைத்திருந்தார். இந்த நிவாரண நிதிக்கு அயர்லாந்திலுள்ள ஆஸ்பத்திரி தர்மகர்த்தா லிமிடெட் ஸதாபனம் ரூ. 1390க்கு (100 பவுண்) ஒரு வங்கி நோட்டை அனுப்பி வெள்ளத்தினால் கஷ்டமுற்றுள்ள அகதிகளுக்கு உதவும்படி தெரிவித்துள்ளது.

கொள்ளைக் கூட்டத் தினர் அறுவருக்குச் சிறைத் தண்டனை

களுத்துறை, அக். 18

ஹொரனை என்னுமிடத்தில் ஜாலகாலா கிராமத்தில் சட்டவிரோதமாக கூட்டங் கூடி பலாத்காரத்தை உபயோகித்து லூயிஸ் என்பவர் வீட்டினுள் பிரவேசித்து அங்குள்ளவர்களுக்குச் சொந்தமான ஜவுளி வகைகளையும் நகைகளையும் களவாடியதாக தோமஸ் என்னும் சுரகாரயா, டி. ஸி. சீமன் பெரேரா, எம். ஏ. டேவிட் என்னும் லூயிஸ், அம்லின் சில்வா, டபிள்யூ. எட்வின், சைமன் என்னும் ஆறு பேர்கள் மீதும் குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு களுத்துறை அசைஸ கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணை முடிவில் ஆறு எதிரிகளும் குற்றவாளிகளென ஜூரர்கள் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். நீதிபதி தோமஸ் என்னும் சுரகாரயா, டி. ஸி. சீமன் பெரேரா ஆகிய இருவருக்கும் தலா 8 வருடச் சிறைத் தண்டனையும் எம். ஏ. டேவிட் என்பவருக்கு 6 வருடச் சிறைத் தண்டனையும், அம்லின் சில்வா, டபிள்யூ. எட்வின். சைமன் ஆகிய மூவருக்கும் தலா 4 வருடச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

பாதுகாப்புச் சட்டத்தை மீறினர்

10,000 ஸ்டெர்லிங் அபராதம்

லண்டன், அக். 16

அமெரிக்காவில் தோல்விற்று அப்பணத்தை பிரிட்டனுக்கனுப்பத்தவறி அதன் மூலம் பாதுகாப்புப் பொருளாதாரச் சட்டத்தை மீறியதாகத் தொடரப்பட்ட வழக்கில் ரேய்மென்ட்சென் என்பவர் மீது 15,000 ஸ்டெர்லிங் அபராதம் விதிக்கப்பட்டது. மாஜிஸ்டிரேட் பின்னால் இத்தொகையை 10,000 ஸ்டர்லிங் காகக்குறைத்தார்.

இந்தியர் மயமாக்கும் திட்டம்

ராணுவ தலைமை காரியாலய முடிவுகள்

புதுடில்லி, அக். 16

ராணுவத்தை இந்தியர் மயமாக்கும் திட்டம் சம்பந்தமாக இந்திய ராணுவ தலைமை காரியாலயங்கள் சில முடிவுகள் செய்திருப்பதாக இந்திய சர்க்கார் அறிவிக்கின்றனர் லாயக்கான இந்திய அதிகாரிகளுக்கு நிரந்தர கமிஷன் தரப்படும்.

விடுவிக்கப்பட்ட சில இந்திய ராணுவ அதிகாரிகளை மீண்டும் வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாகவும் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

சிங்கப்பூர் இந்தியத் துருப்புகள்

முற்றாக வெளியேறி விட்டன

சிங்கப்பூர், அக். 17

இன்று ஜியார்ஜிக் என்ற கப்பலில் இந்தியக் காலாட் படை சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டது. இத்துடன் இந்தியத் துருப்புகள் நடமாட்டம் சிங்கப்பூரில் ஒழிந்துவிட்டது.

1819-ம் ஆண்டில் ஸர் ஸ்டாபோர்ட் ராபிள்ஸ் என்பவரை சிங்கப்பூருக்கு இட்டுச் சென்றபோதுதான் முதலாவதாக இந்திய சிப்பாய்கள் சிங்கப்பூர் மண்ணில் மிதித்தனர். இப்போது கடைசியாக புறப்பட்டுள்ள காலாட் படை பாக்கிஸ்தான் டொமினியனுக்கே சேருமென்று தெரிகிறது. இப்படை பஞ்சாப் பட்டாளத்தின் ஒரு பகுதியாகும். (ராய்ட்டர்)

கிரீன்லந்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பு

டென்மார்க்கின் கோரிக்கை

நியூயார்க், அக். 17

டெனமார்க்கை ஹிட்லர் கைப்பற்றிய போது கிரீன்லந்தில் அமெரிக்க யுத்த தளங்களை நிறுவியது. அந்த யுத்த தளங்களைக் காலி செய்யும்படி இப்பொழுது டென்மார்க் அமெரிக்காவைக்கேட்கும். (ராய்ட்டர்)

பிரிட்டனுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் ஸ்டாலினின் புத்திமதி

பொருளாதார ஒத்துழைப்பு புதிய யுத்த பீதியை ஒழித்துவிடும்

சோவியத் தலைவரும் பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டியும் 2 மணி நேரம் சம்பாஷணை

வார்ஸா, அக். 17

கருங்கடல் துறைமுகமான சோசியில் இந்த வாரம் பிரிட்டிஷ் பார்லிமெண்டு இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களின் தூதுக்கோஷ்டி சோவியத் தலைவர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினர். பார்லிமெண்டு தொழிற்கட்சி அங்கத்தினர் திரு சிலிபாகஸ தலைமையில் சென்ற இந்த பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டியாரிடம் ஸ்டாலின் பின்வருமாறு தெரிவித்தார்:-

சோவியத் ரஷியா கிழக்கு ஐரோப்பாவுக்கும் மேற்கு ஐரோப்பாவிற்குமிடையே பளவு இருப்பதை விரும்பவில்லை இந்த இரும்புத் திரையை நீக்க வேண்டுமென்றே சோவியத் ரஷியா கருதுகிறது. பொருளாதாரப் புனருத்தாரண முயற்சிகளில் நாம் ஒத்துழைப்போமேயானால் இத்திரை தானாகவே விலகிவிடும். ஐரோப்பா ஐக்கியமுறும். பிரிட்டனும் மேற்கு ஐரோப்பாவும் பொருளாதார விஷயங்களில் சோவியத் யூனியனுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பொருளாதார விஷயங்களில் ஒத்துழைப்பு ஏற்படுமாயின் உலகைப் பயமுறுத்தி வரும் யுத்த பீதி ஒழிந்து விடும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டு தூதுக் கோஷ்டியார் ஸ்டாலினுடன் இரண்டு மணி நேரம் சம்பாஷித்தார்கள். ஸ்டாலினின் அறிவும் கம்பீரமும் நிறைந்த தோற்றத்தைக் கண்டு வியந்தனர். அவருடைய புத்திசாலித்தனமான யோசனை அவர்களைக் குதூகலப்படுத்தியது.

தூதுக் கோஷ்டியார் இப்பொழுது போலந்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள், வார்ஸாவில் அவர்கள் பத்திரிகா நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தனர்:-

நாங்கள் ஸெக்கோஸ்லேவியாவிலும், யூகோஸலேவியாவிலும், சோவியத் ரஷியாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து விஷயங்களை அறிந்ததில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார விஷயங்களில் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை உணர்ந்தோம். நமது உற்பத்திச் சாமான்களை கிழக்கு ஐரோப்பாவுக்கும் ரஷியாவுக்கும் அனுப்பி அங்கிருந்து முக்கியமாக ரஷியாவிலிருந்து நாம் உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ரஷியா பிரிட்டனுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள தயாராகவும் விருப்பமுடனுமிருக்கிறது. இது சம்பந்தமாக பிரிட்டன் ரஷியாவுடன் சமரசப் பேச்சுகள் நடத்துமென்று நம்புகிறோம்.

மஞ்சூரியாவில் மும்முரமான யுத்தம்

நாங்கிங், அக். 17

மஞ்சூரியாவில் கோரமான யுத்தம நடைபெறுகிறது. முக்டானுக்கு வடக்கே 6) மைல் தூரத்திலுள்ள கெய்யூனை ச் சுற்றி போர் நிகழ்கிறது. இது சியாங்கை ஷேக்கின் வட கிழக்குத்தலைநகராகும். மஞ்சூரியா தலைநகரான சாங்சுன்னுக்கு வெளிப்புறத்தில் சீன கமியூனிஸ்டுகள் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.

கொரியாவில்

ஸியோல், அக். 17

கொரியாவிலுள்ள ரஷிய-அமெரிக்கக் கூட்டுக் கமிஷனின் ரஷியப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவரான கர்னல் ஷிட்காக்,தென் கொரியாவின் அமெரிக்க ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜான் ஹாட்ஜுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஸியோல் நகரிலுள்ள போலிஸ் தலைவர் சாங்தைக் சாங கூட்டுக் கமிஷனின் சோவியத் பிரதிநிதிகள் கோஷ்டியை அக்கிரமமாகத் தாக்கிப் பேசியிருப்பதால் அவரை உடனே வேலையிலிருந்து நீக்கும்படி அக்கடிதத்தில் கோரியிருக்கிறார். (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடி தொழில் முற்றுக திருத்தியமைக்க வேண்டும்

கரும்பு-பருத்தி உற்பத்திக்கு மந்திரியின் திட்டம்

கொழும்பு, அக். 19

கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி பகுதி மந்திரியாக இருக்கும் திரு. ஜி. ஈ. டி. சில்வா, மீன்பிடி தொழில் முற்றுக திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கருதுகின்றார். புதியதாக மேலும் இரு இயந்திர மீன்பிடி படகுகளை வாங்கி அத்துடன் சீனா அல்லது மலாயாவிலிருந்து மீன்பிடி தொழில் முறைகளில் நிபுணரான ஒருவரையும் தருவிப்பதென்றும் அவர் கூறுகின்றார்.

இலங்கையில் கரும்பு, பருத்தி உற்பத்தியையும் உற்சாகப்படுத்தி அதற்கும சர்க்கார் ஆதரவைக் கொடுக்க வேண்டுமென்றும் மந்திரி கூறுகின்றார். மட்டக்களப்பு பகுதியில் கரும்பு உற்பத்திக்கு 70,000ஏக்கர்நிலம் வேண்டுமென்றும் இலங்கையில் சீனி உற்பத்தி தொழிற்சாலை, ஜவுளித தொழிற் சாலை ஆகிய இரண்டும் ஸ்தாபிக்கப்பட மந்திரி சபையின் அங்கீகாரத்தைத் தாம் பெற முயற்சிப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

மீன்பிடித் தொழிலில் அதிக கஷ்டங்கள்

இப்பொழுது கொழும்பு மார்க்கெட்டுகளில் மீன்களின் விலை வெகுவாகக் குறைந்துள்ளது. சில ரக மீன்கள் ராத்தல் 50 சதமாக விற்கப்படுகின்றன. இயந்திர மீன்பிடி படகுகளைக் கொண்டு சில தனிப்பட்ட நபர்கள் நடத்தும் ஸ்தாபனத்தினால் இவ்விதம் மீன்களைக் குறைந்த விலைக்கு சப்ளை செய்ய முடியாது. ஆகக் குறைந்தது ராத்தல் 70 சதத்துக்காயினும் அவர்கள் விற்பனை செய்ய வேண்டும். மேலும் இப்பொழுது தென்மேற்கு, வடகிழக்கு கரையோரங்களில் மீன்பிடி காலம் ஆரம்பிப்பதால் இங்கு மீன்களின் விற்பனை விலை மேலும் குறையுமென்று கூறப்படுகிறது. இத்துடன் இயந்திர மீன்பிடி படகு வைத்து நடத்தும் ஸ்தாபனத்துக்கு மேலும் மேலும் அதிக கஷ்டங்கள் வருமென்றும் கூறப்படுகிறது.

மேலும் மீன்பிடி தொழிலில் ஈடுபடுடுள்ளவர்களுக்கு மீன்களைப் பாதுகாத்து வைக்க போதிய பனிக்கட்டி கிடைப்பதும் கஷ்டமாக இருப்பதாகவும் இதற்கு சர்க்கார் கொழும்பில் ஒரு பெரிய பனிக்கட்டி உற்பத்தி தொழிற்சாலையை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பலரும் மந்திரிக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ விஷயம்பற்றி மந்திரியும் ஆலோசனை செய்வதாகக் கூறியுள்ளார்.

கட்டிடத்தை தகர்க்க வெடிகுண்டுகள்?

கண்டி, அக். 17

கண்டியில் ஸ்ரீபுராசிற்றுண்டிசாலை இருக்கும கட்டிடத்தின் பின் பகுதியில் மூன்றிடங்களில் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தன வென்றும் ஒரு குண்டு வெடித்த பொழுது ஏற்பட்ட சத்தத்தினாலும் சேதத்தினாலும் தகவல் போலிசாருக்கு அனுப்பப் பட்டதென்றும் கூறப்படுகிறது. போலிசார் வந்து சோதனையிடபோது வேறும் இரு குண்டுகள் கண்டெடுக்கப் பட்டன. அக்குண்டுகள் அப்புறப்படுத்தப்பட்டதும் வெடித்து விட்டன. இவற்றினால் சிறிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன வென்று கூறப்படுகிறது புலன் விசாரணை நடைபெறுகிறது.

மைத்துனனைக் கத்தியால் குத்தினார்

எதிரிக்கு ரூ 200 அபராதம்

கொழும்பு, அக். 17

கம்பகாவைச் சேர்ந்த நாரங்கொடபாலுவா என்னும்இடத்தில் கடந்த பெப்ரவரி 17-ந் தேதி மைத்துனனைக்கத்தியால் குத்தியதாக பிரான்ஸிஸ் என்பவர் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு ரூ. 200 அபராதம் விதித்து இருவருடத்துக்கு நன்னடத்தையுடன் இருக்க எழுத்து மூலம் உறுதிப்பத்திரம் அளிக்கவேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

வழக்கறிஞரைப் பயமுறுத்தினார்

எதிரிக்குத் தண்டனை விதிக்கப்பட்டது

மாத்தறை, அக். 17

தங்காலையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. டி. பி. அடபத்து என்பவரை இகழ்ச்சியாகப் பேசியதுடன் அவரைப் பயமுறுத்தியதாகவும், ரத்னாயகா என்பவரைத் தாக்கியதாகவும் ரதவெலா என்னுமிடத்தைச் சேர்ந்த கிரிமகாதயா என்னும் கிரிகோரிஸ் மீது குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் மாத்தறை மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்ததுடன் ஒரு வருடத்துக்கு ரூ 100 நன்னடத்தைப் பிணையில் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

பெரிய மரம் சரிந்து கொட்டகை மீது விழுந்தது

அங்கவீனர் விபத்திலிருந்து உயிர் தப்பினார்

மாத்தறை, அக். 17

மாத்தறைக் கோட்டைப் பகுதியில் ஒரு பழைய பெரிய மரத்தின் கீழ் கொட்டகையிலிருந்து மனுக்கள் தயாரித்துக் கொடுக்கும அங்கவீனரான திரு. அல்டன் ஏர்னஸ்ட் என்பவர் ஆச்சரியமான விதத்தில் பெரிய விபத்திலிருந்தும் தப்பினார். இவர் வேலை செய்து கொண்டு இருந்த இடத்திற்கு முன் நின்ற பெரிய மரம் சரிந்து விழுந்ததனால் இவர் இருந்த கொட்டகை முற்றாக அழிந்து விட்டது. இவர் விபத்தினின்றும் தப்பி விட்டார். மரத்தைப் பார்ப்பதற்கு பெருந் திரளான மக்கள் அந்த இடத்துக்கு வந்து கூடினார்கள்.

தேயிலை களவு போவதைத் தடுக்க சட்டம்

தோட்ட முதலாளிகள் கூட்டத்தில் ஆலோசனை

கண்டி, அக். 17

டிம்புளா ஜில்லாவில் உள்ள எஸ்டேட்டுகளில் அடிக்கடி தேயிலை களவுபோவதுபற்றி புசெல்லாவா எஸ்டேட் முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. எஸ்டேட்டுகளில் தேயிலை விற்கப்படுவதை தடை செய்ய வேண்டுமென்றும் தேயிலை களவுபோவதைத் தடுக்க சட்டங்கள் ஆக்குவது பற்றி ஆலோசிக்க வேண்டுமென்றும் தலைவர் கூறினார்.

கம்பெனியில் மருந்து களவாடினார்

எதிரிக்கு ஒரு வருட சிறையும் ரூ 10 அபராதமும்

கொழும்பு, அக். 18

இந்திய ரஸாயன கைத்தொழில் கம்பெனி லிமிட்டெட்டுக்குச் சொந்தமான மூன்று பாக்குகளிலிருந்த "போராக்ஸ்" மருந்தைக் களவாடியதாகப் புறக்கோட்டை 1-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த அப்தீன் என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கோட்டை மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனையும் ரூபா 10 அபராதமும் விதித்தார் அபராதம் செலுத்தத் தவறின் ஒரு வாரச் சிறைத் தண்டனையென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

குதிரை மேற்பார்வையாளர் தாக்கப்பட்டதால் மாண்டார்

கொழும்பு, அக். 18

செல்வரத்தினம குதிரை லாயத்தில் வேலைசெய்யும் இசக்கிக் கோனார் என்பவர் அவருக்கு உணவு சப்ளை செய்யும் பெரியசாமி என்பவரால் தாக்கப்பட்டபோது மூர்ச்சையாகி அதன்பின் மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது.

மரண விசாரணை நடைபெற்றது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

வாளேந்திய சிங்கக் கொடி

இலங்கையின் தேசியக்கொடியாக ஏற்றுக்கொள்ளலாம்

'தினமின' வெளியிடும் ஆராய்ச்சிக் கட்டுரை

நேற்று முன்தினம் வெளிவந்த "தினமின" பத்திரிகையில் உள்ள கட்டுரையின் தமிழாக்கம்:

விஜயராஜ பிரிவேனாவின் அதிபர் ஸ்ரீ சரணங்கர பிக்கு எழுதுவது.

நமது வாழ்க்கை சுயாதீனத்திற்கு வந்துவிட்டது. நம நாட்டின் தேசியக் கொடி-எது வாய்-எப்படியா யிருக்கவேண்டுமென்பது இப்போதுநமமுன்னுள்ள பிரச்னைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. தேசத்தின் மீதும், நமது ஜாதி-கலாசாரத்தின்மீதும் ஆவமுடைய யாவர்க்கும், நமது தேசியக் கொடி எதுவாய் இருக்கவேண்டுமென்று தீர்மானிப்பதற்கு இக்கட்டுரை ஆதாரமாயிருக்குமென்று நம்புகிறேன்.

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு தேசங்களிலும் ஜாதி, சமயம், கலாசாரம், குழுவினர், தனிப்பட்ட நபர், மற்றும்படி பிரதேசவாரியாகவும் ஒவ்வொருவகையில் ஒவ்வொரு லட்சியத்தை அடிப்படையாகக் கொடிகள் உபயோகத்தில் இருந்து வந்தன. அதேபோன்று, இன்றும் நாகரீக மக்கள் தத்தமக்கு உசிதமான கொடிகளை ஒவ்வொரு கொள்கைகளையும்நடைமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கி வருகின்றனர். மனிதர்களைப் போன்று தேவர்களும், அசுரர்களும் கொடிகளை உபயோகித்ததாகவும், தேவர்களுக்கும் அசுரர்களுக்கு மிடையே நிகழ்ந்த போராட்டங்களிலே கொடிகள் உபயோகிக்கப்பட்டதாகவும் "தஜக்த சூத்திரம்" கூறுகிறது.

புராதன இலங்கையில் அரசர்கள் உபயோகித்த கொடியைப்போன்று, பிரதேசவாரியாகவும் வெவ்வேறான சின்னங்களுடைய கொடிகளை உபயோகிக்கப்பட்டுவந்ததாக சரித்திரங்கள் காட்டிக்கொடுக்கின்றன. அந்தந்த பிரதேசத் தலைவர்கள் தலதா பெரஹராவில் கலந்துகொள்ளும்பொழுது, தத்தம் கொடிகளை அதிகாரத்தோரணையில் பாவிக்கவேண்டுமென்று, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க அரசர் உத்தரவிட்டிருந்ததாகத் தெரிகிறது.

பண்டைக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட கொடிகள் ஆட்சி புரிந்த அரசர்களின் சின்னங்களைக்கொண்டதாய் இருந்தது. தற்காலத்தில் அநேகமாக தேசத்தையோ ஜாதியினரையோ குறிப்பதாயிருக்கிறது. இந்த மாற்றம் இருந்தபோதிலும், அன்றும் இன்றும் மாற்றமில்லாத கொடிமுறைகளுமிருக்கின்றன தற்போது படைத்தலைவர்களுக்கு தனிப்பட்டசின்னங்களையுடைய கொடிகள் இருப்பதுபோன்று, முற்காலத்திலும் அந்தந்த குறிப்பிட்டபிரதேசத்தில் தலைமை தாங்கியவர்களுக்கும் கொடிகள் இருந்தன.

கொடியிலேயுள்ள நிறமும் சின்னமும் ஏதோ ஒரு லட்சியத்தைக் குறிப்பதாக அன்றும் இன்றும் கருதப்படுவது மாமூலாக இருந்து வருகிறது. புராதன இலங்கையில் பிரதேசவாரியாக இருந்த தலைவர்களுக்கு ஒவ்வொரு சின்னங்கள் காணப்பட்டன. சிங்கள அரசர் காலத்தில், பிரதம லிகிதரின் (மாஹலேக்கம்) கொடியில் எழுத்தாணி சின்னமாய் இருந்தது. கஜநாயக்க நிலமேயின் கொடியில், சிங்க ரூபம் சின்னமாய் இருந்தது. கொடி துவக்கு நிலமேயின் கொடியில், துவக்கு சின்னமாய் இருந்தது. இந்தமாதிரியாக அந்தந்த தலைவர்களைக் குறிக்கும் சின்னங்கள் அந்தந்தக் கொடியில் காணப்பட்டன.

தேசத்தைக் குறிப்பிடுவதற்காக கொடியைப் பாவிக்கும் கொள்கையும்இப்படியாய்தான் இருந்ததுபோலும்! எனினும் தனிப்பட்ட கொள்கையையும் நபர்களையும் குறிப்பிடும் சின்னங்களையுடைய கொடிகளிலும் பார்க்க, முற்றும் வேறான மாதிரி அதாவது, தனிப்பட்ட சாராருக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்காமல் தேச மக்கள் யாவருக்குமே பொதுவான கருத்தைக் குறிக்கும் ஒரு பொதுக் கொடியை ஏற்படுத்த முடியுமானால் அது சிறந்த லட்சியமாகும் ஆனால் தேச மக்களின் பண்டைய நாகரீகத்தையும் கலாசாரத்தையும் வீரப் பிரதாபங்களையும் அலட்சியம் செய்யக்கூடாது.

இலங்கையின் தேசியக் கொடி ஏதுவாய் இருக்கவேண்டும்? என்று தீர்மானிப்பதற்கு இன்னும ஆராய்ந்தெடுத்த குறிப்புகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். முதலாவதாக இலங்கைக்கு சிங்கள தீபம் என்ற பெயர் எப்படிஉண்டானது என்று ஆராய வேண்டும். 'விஜய குமாரனும் சகாக்களும் சிங்க கோத்திரத்தினுள்ளோர் என்றும், இவர்கள் இலங்கையை ஆட்சி புரிந்தபடியால் அன்றிருந்து 'சிங்கள தீபம்' என்ற பெயர் வழங்கப்பட்டுவந்ததாகவும் பலரின் அபிப்பிராயமாகும். இது முற்றும சரியல்லவென்பதே எனது அபிப்பிராயமாகும். காரணமாக: விஜயன் வருமுன் பிருந்தே இலங்கைக்கு 'சிங்கள தீபம்' என்றபெயர் வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது,

"றஸக்ற வியாத நாமாயங்
பைரவானந்த யோசியாநா,
உக்தரு சிங்கள ராவணுயபஹ
மாங்ஸா சிநேபுரா"

இந்த சூத்திரத்தின் பாஷை நடை எப்படியாயினும், பைரவானந்த யோதியால், அன்று சிங்கள ராஜனான ராவணனுக்கு சொல்லிய மூலிகை மருந்தைப பற்றி இது கூறுவதாக இருக்கிறது. "றசேந்திர சிந்தாமணி" யில் உள்ள 16 சுலோகங்களினால் விபரிக்கப்படும் இந்த ஔஷதத்தை, மிதமிஞ்சிய மாமிச உணவால ராவணனுக்கு உண்டான அஜீரண ரோகத்திற்கு பரிகாரமாக, அந்தக் காலத்தில இந்தியாவில வாழ்ந்த பைரவானந்த யோகியால சொல்லப்பட்டதாகக் கூறுகிறது.

ராவணனுடைய காலம், விஜயகுமாரன இலங்கை வருகைக்கு சுமார் 8000 வருடங்களுக்கு முன்னென்று சரித்திரக் காராகளில் அநேகர் ஏகோபித்து முடிவு செய்கிறார்கள். அன்று ராவண அரசனுக்கு சிங்கள ராஜ நாமம் உபயோகிக்கப்பட்டதாகத தெரிவது, இதனால மாத்திரமல்ல. இன்றுவரைக்கும் பிரசுரத்திற்கு வராத சில வைத்திய கிரந்தங்களில் "லங்கேஸ்வரேன ராவணுத்ராஜாக்ஞக்ருத்த" என்று காணப்படுவதலும் நன்றாகத தெளிவாகிறது. பண்டைக்காலத்தில இலங்கையில் சிங்கங்கள் ஏராளமாக வசித்து வந்தபடியால் இலங்கையை "சிங்கள தீபம்" என்றும், அன்றிருந்தே வருகிற மனித சந்ததிக்கு சிங்களப் பெயர் வழங்கப்பட்டுவருகிறதென்றும் ஒப்புக்கொள்வதற்கு அபிப்பிராய பேதமே இருக்க வேண்டியதல்லை.

விஜயனின் வருகையினால் இலங்கை சிங்கள நாமத்தைப் பெறவில்லை. விஜயனும் சகாக்களும் இலங்கைக்கு வந்தபடியால் சிங்களவர்களானார்களென்பது தான் சரியான முடிவு.

நம் தேசமான இலங்கைத் தீவை குறிப்பிடும் கொடியில் வாளேந்திய சிங்கத்தின் சின்னம் இருப்பதைப்பற்றி, இலங்கையிலேயே நிரந்தரப் பிரஜைகளாக வாழும்எந்தவகுப்பு மக்களும்எதிர்ப்பு உண்டாக்கி கிளர்ச்சி செய்வதற்குக் காரணமெதுவும்இல்லை. ஏனெனில், சிங்கச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடி இலங்கையின் சரித்திர சித்தாந்தத்தை குறிப்பிடுவதேயன்றி, எந்த வொரு மக்கட் சாகியத்தையும் குறிப்பிடுவதல்ல. சிங்களக் கொடியை இலங்கைப் பார்லிமெண்டிலும் இலங்கைவாழ் சகல சாகியத்து மக்களும் தேசியக் கொடியாய் அபிப்பிராய பேதமின்றியே ஒப்புக்கொள்ளலாம்.

ரஷியாவின் சக்தி கண்டு அமெரிக்கா பீதி

எந்தத் திக்கிலும் பாயும் வல்லமை ரஷியாவுக்கு உண்டாம்

துருப்புக்களிடையே ஆண்டுப்பிரசுரம்

வாஷிங்டன், அக். 15

அமெரிக்கா ராணுவத்தினரால் துருப்புக்களுக்கு ஓர் ஆண்டுப் பிரசுரம் வினியோகிக்கருபட்டுள்ளது. அதில் "ஐரோபிய ஆசிய நிலப்பரப்பின் ஒப்பெரும்பகுதியைக் கட்டியாளும் ரஷியா எந்தத திக்கில் வேணுமானாலும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது "என்று கூறப்பட்டுள்ளது.

மேற்கே ஐரோப்பாவுக்கும் கிழக்கே சீனாவுக்கும் வடதுருவப் பிரதேசமார்கமாக வட அமெரிக்கா மீதும் ரஷியா பாயலாம். சோவியத் நிலச் குடிலோ தாக்குதலுக்கு மிக ஏற்றதாய் உள்ளது, ஆனால் அதே சமயத்தில் தற்காப்புக்கு அது ஏற்றதல்ல ஏனெனில் அவர்கள் சக்தி பென்னும் பெரிய ஒரு நிலப்பரப்பில் அங்கும் இங்குமாகச் சிதறிப் போகும் "என்று அப்பிரசுரம் சொல்லுகிறது.

"பாப்பரான" பிரிட்டிஷ் பிரபு

லாயிட் ஜார்ஜ் குமாரர் நிலை

லண்டன், அக். 16

முதலாவது உலக மகாயுத்த காலத்தில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜின் 58 வயதுக் குமாரர் லாயிட் ஜார்ஜ் பிரபுவுக்கு இப்போ உள்ள கடன்களின் தொகை 4141 ஸ்டெர்லிங் என்றும் அவருக்குள்ள பூராச் சொத்தின் பெறுமதி 1894 ஸ்டெர்லிங்என்றும் லண்டன் "பாங்கிறப்ட்ட் கோர்ட்டில்" அவரால் கூறப்பட்டது. அவர் ஜனுவரி 1944 வரை ராணுவத்தில வேலைசெய்ததாகவும் அதன் பின் பத்திரிகைத்தொழிலில்ஈடுபட்டதாகவும் தெரிகிறது.

தமது வாழ்க்கைத்தோல்விக்குதமக்குப்போதிய தேக சௌக்கியம் இல்லாததே காரணம் என்றும்அவரால் கூறப்பட்டது.

(ராய்ட்டர்)

இந்தியாவுக்கு உணவு

உதவிசெய்ய பர்மா தயார்

கல்கத்தா, அக் 15

இந்தியாவில் பர்மா ஹைக் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள உவின் டில்லிக்குப் போகும்வழியில் இங்கு தங்கினார் இந்தியாவுக்கு உணவுக தானியம் ஏற்றுமதி செய்வதில் பர்மா மகாதமாவான பர்மா மந்திரி வெகு ஆவலாக இருக்கிறார் என்றும ஏற்கனவே அரிசிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் இந்தியா உணவு விஷயத்தில் இந்தியாவுக்கு இருக்கும் கவலை பர்மாவுக்குமிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

"வாஷிங்டனில் யுத்தக் கோஷ்டி"

உலக ஆதிக்கம் விரும்புகிறது

வாலஸின் கண்டனம்

பால்டிமோர், அக். 15

பிரபல சமாதான வாதியாகிய ஹென்றி வாலஸ இங்கு அமெரிக்க முற்போக்குப் பிரஜைகள் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காகச் சமூகம் அளித்துள்ளார்.

அவர் "அமெரிக்கத் தற்காப்பு மந்திரி ஜேம்ஸ பொரஸடால் வாஷிங்டனில் வளர்ச்சியடைந்துவரும் ஒரு யுத்தக் கோஷ்டியின் தலைவராவார்" என்று கூறி பலமாகக் கண்டித்தார்

"பொரஸடாலும் அவரது 'வால்ட் ஸடிரீட்' கும்பலும் முழு உலகத்தையும் அடக்கி ஆளத திட்டமிடுகிறார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தோனேஷிய குடியரசு

இந்திய சர்க்கார் அங்கீகாரம்

படேவியா, அக். 15

இங்கு வந்து சேர்ந்த இந்திய தூதர் திரு என் ராகவன் பிள்ளை கூறியது தெரிவித்தார்:—

இந்தோனேஷிய குடியரசுத் தலைநகரான ஜோக்ஜகர்த்தாவிலும் (ஜாவா), வடசுமத்திரா (டச்சு பிரதேசம்) விலுள்ள மெடான நகரிலும் இந்திய சர்க்கார் மற்றுமிரு ஸ்தானிகங்களை நியமிக்க உத்தேசித்திருக்கிறார்கள் இந்தோனேஷிய குடியரசை இந்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள்.

கிரவுன்
தியேட்டர்
ஸகின்னர்ஸ ரோடு மருதானை
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.
சித்திர கலாவன் உன்னத தயாரிப்பு!
"தாய் நாடு"
மகத்தான 5-வது வாரம்
தமிழ் படம்
அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்தமக்களை மீடசிக்காகவும், தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைச் சித்தரிக்கும் படம்
மெட்ரோஸ் மெயில் புகழ் பாட்லிங் மணி
புதிய நடிகை சுந்தரி
மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.
பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்களிக்கு அரைசார்ஜ்

சீத்ராகலாவின்
தாய் நாடு
(தமிழ்)
டைரக்ஷன்
T.S.மணி
ஸ்டுடியோ: சீத்ரகலா, மதுரை.

பிடிச் சக்கரவர்த்தி.
த.பி.
செரக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்
சொக்கலால் ராம்சேட்
T.B. சோக்கலால் ராம்சேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் முஸ்லிம்களின் மக்கா யாத்திரை

ரஷிய எல்லையில் பாரசீக ராணுவ முஸ்தீபு

ஆயில் ஒப்பந்தமும் அபாய நிலைமையும்

மாஸ்கோ, அக். 17

சோவியத் நாடுகளைச் சேர்ந்த இஸ்லாம் மதத்தைத் தழுவிய எல்லா முஸ்லிம்களும் இந்த வருடம் மக்கா யாத்திரை செல்வதற்கு சோவியத் சர்க்கார் அநுமதியளித்துள்ளார்கள். சோவியத் முஸ்லிம்கள் சென்ற வருடம் மக்காவுக்கு யாத்திரை சென்றார்கள். இந்த வருடம் காலரா பரவியிருப்பதை முன்னிட்டு சில சமீப கிழக்கு நாடுகள், பிரயாணிகள் போக்குவரத்துக்குத் தடை விதித்திருப்பதால் சோவியத் முஸ்லிம்கள் ஜனுவரி மாதவாக்கில் மக்காவுக்கு யாத்திரை செல்வார்கள். சோவியத் ரஷியாவிலுள்ள முஸ்லிம் மத ஸ்தாபன போர்டைச் சேர்ந்த பல பிரபல முஸ்லிம்கள் செல்வார்கள். டிரான்ஸ் காக்கஸஸ் முஸ்லிம் மத போர்டு தலைவர் ஷேக் உல் இஸ்லாம் அகுண்டக, வட காக்கஸஸ் முஸ்லிம் மத போர்டு தலைவர் முப்தி ஹசாய் ஜெபகவ், அலிம் கட்ஜயவ், யூசுபவ் முதலிய பிரபல முஸ்லிம்களும் செல்வார்கள்.

பாரசீக ரஷிய எல்லையில் ராணுவ முஸ்தீபு

டெஹ்ரான், அக். 17

இவ்வாரக் கடைசியில் பாரசீக பிரதம மந்திரி கவாம் ரஷிய-பாரசீக ஆயில் ஒப்பந்தம் சம்பந்தமாக பாரசீக பார்லிமெண்டில் முக்கியமானதோர் அறிக்கை சமர்ப்பிக்கப் போவதால், பாரசீகத்தின் வடக்கே ரஷிய எல்லையையடுத்த பிரதேசங்களில் தடபுடலான ராணுவ முஸ்தீபு செய்யப்பட்டு வருகிறது. ரஷிய எல்லைப்புறத்திலுள்ள இரு இடங்களில் பாரசீக சர்க்கார் ராணுவச் சட்டத்தை பிரயோகம் செய்து ராணுவ ஆட்சியை நிறுவியிருக்கிறார்கள். பாரசீகத்தின் மீது ரஷியா ஆக்கிரமிப்பு செய்யாது பாரசீகத்தைப் பாதுகாக்க இன்று ரஷிய எல்லைப் புறத்திற்கு பாரசீகப் பாதுகாப்புப் படைகள் செல்கின்றன. ரஷியாவையடுத்துள்ள பாரசீகத்தின் இரு ஜில்லாக்களான டார்ஜாஸ, மகமூதாபாத் ஆகிய இடங்களில் பாரசீகத் தளபதி ராணுவ ஆட்சியை நிறுவியிருக்கிறார். ரஷியாவையும் துருக்கியையும் அடுத்துள்ள எல்லைகளில் பாரசீகப் பாதுகாப்புப் படைகள் வந்து குவிந்திருக்கின்றன.

ரஷியா—பாரசீக ஆயில் ஒப்பந்தம் சம்பந்தமாக பிரதம மந்திரி கவாமின் அறிக்கையைப்பற்றி அந்தரங்கமாக கலந்து யோசிக்க பார்லிமெண்டு தலைவர் 12 அங்கத்தினர்களை அழைத்திருக்கிறார். அவர்களில் ஒருவர் ரஷிய எல்லையிலுள்ள அசர்பெய்ஜான் மாகாணத்தின் பிரதிநிதியான முஹம்மது மாலிகா. இவர் 1944-வது வருட முதல் பாரசீக பிரதம மந்திரியாக இருந்தவர். ரஷியாவுக்கும், பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும் ஆயில் ஒப்பந்தமளிக்க சர்க்கார் மறுத்ததால் பிரதம மந்திரி பதவியை ராஜாமாச் செய்துவிட்டு இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.

(ராய்ட்டர்)

ஆசிய தொழில் மகாநாடு

இலங்கைப் பிரதிநிதிகள்

கொழும்பு, அக். 18

தொழில் சமூக சேவை மந்திரி காரியாலயத்தில் இருந்து இன்று வெளியான ஓர் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:-

அக்டோபர் 27ல் சர்வதேச தொழிற் காரியாலயத்தில் ஆசிய-வட்டார மகாநாடு நடைபெறும்போது இலங்கையும் அதில் கலந்துகொள்ளும். இலங்கைப் பிரதிநிதிகள் பின்வருமாறு:-

அரசாங்கப் பிரதிநிதிகள்: எம். டபிள்யூ. எச். டி. சில்வா கே. ஸி. (இலங்கைச் சர்க்காரின் இந்தியப் பிரதிநிதி), பி. பொன்னையா ஸி. ஸி. எஸ். (உதவித் தொழிற் கமிஷனர்) முதலாளிகள் பிரதிநிதி ஸி. எச். இஸட். பெர்னான்டோ, ஆலோசகர்கள் ஸிரில் டி. சொய்சா, ஜே. ஏ. டி. பெரேரா, தொழிலாளிகள் பிரதிநிதி ஸி. ஜே. ஸி. டி. சில்வா இரு ஆலோசகர்கள் பெயர் பின்னால் வெளியிடப்படும்.

பொது சேவை உத்தியோகஸ்தர் கடமைகள்

பட்டமளிப்பு விழாவில் பிரதமர் பேச்சு

கொழும்பு, அக் 19

இலங்கை சர்வகலாசாலையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா ஒரு பிரசங்கம் நிகழ்த்தினார். சர்க்கார் சேவையில் ஈடுபட விரும்பும் பட்டதாரிகளிடம் இருக்க வேண்டிய யோக்கிய தாப்சங்கள்பற்றி அவர் குறிப்பிட்டார். சர்க்கார் சேவையில் ஈடுபட விரும்பும் பட்டதாரிகள் சமூகத்துக்குத் தொண்டாற்றும் மனப்பான்மையுடன் கடமைகளைச் செய்ய வேண்டுமென்று அவர் கூறினார்.

பட்டமளிப்பு விழாவின் போது சுமார் 150 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றனர். கல்வி மந்திரி திரு. ஈ. ஏ. நுகவெல சமூகமளித்திருந்தார். மேத. கவர்னர் பட்டதாரிகளுக்கு சர்ட்டிபிக்கெட்டுகளை வழங்கினார். இதன் பின் திரு. சேனநாயக்கா பேசுகையில் சர்வகலாசாலையின் முன்னேற்றத்தையும் அங்கு நடைபெற்ற வேலைகளையும் பாராட்டியதுடன் ஸ்தலத்தில் கிடைப்பவைகள் தராதரத்தில் குறைந்தவையென்பது இலங்கை மக்களது பொதுவான அபிப்பிராயமென்றும் இச் சர்வ கலாசாலை பட்டதாரிகள் ஏனைய வெளியிடங்களில் உள்ள பட்டதாரிகளுடன் சரிக்குச் சரிசமமாக நிற்கக்கூடியவர்களென்றும் குறிப்பிட்டார்.

பொது சேவை உத்தியோகங்களில் ஈடுபடும் பட்டதாரிகளில் உலவிதமான மனப்பான்மையுள்ளவர்களும் இருக்கின்றனர் என்றும் சுயநல நோக்குள்ளவர்களும் இருக்கின்றார்கள் என்றும் பொதுவாக கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் படித்துப் பட்டம் பெறுவதுதான் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்படாதென்றும் பட்டம் பெறுவதுடன் மட்டுமல்ல-செய்யும் கடமையில் ஆர்வமும் சமூகத்தின் நலன்களுக்கான சேவையும் வேண்டுமென்றும் வழமையான கடமைகளை மட்டும் சொன்னபடி சொன்ன அளவுக்குமட்டும் செய்துமுடிப்பதென்னும் போக்கு இருக்கப்படாதென்றும ஜனநாயக சர்க்கார் தனது பிரஜைகளின் சேவைகளை வேண்டும் நேரத்தில் எல்லோரும் உதவிசெய்ய முன் வரவேண்டுமென்றும் சர்க்கார் உத்தியோகஸ்தர் முன்மாதிரி காட்டவேண்டுமென்றும் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

மேலும் பிரதமர் தொடர்ந்து பேசுகையில் சர்க்கார் உத்தியோகங்களுக்கு மனுச்செய்பவர்கள் பற்றியும் குணசீலர்கள், அவர்கள் நடைமுறைகள் தேகதிடம் முதலியவை பற்றியும் கூறினார். வருங்கால இலங்கை முன்னேற்றத்திற்கு தேசத்தின் இளைஞர்கள் தொண்டாற்ற வேண்டுமென்றும் குறிப்பிட்டார். சர்வகலாசாலை உதவி அத்தியட்சகர் டாக்டர் டபிள்யூ. ஐவர்ஜென்னிங்ஸ் பிரதமருக்குநன்றி தெரிவித்தார்.

143 புதிய பட்டதாரிகள்

இலங்கை சர்வகலாசாலையின் ஐந்து வருஷ சாதனை

645 பட்டங்களை வழங்கியது

நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வகலாசாலைப் பட்டம் அளிப்பு விழாவின் போது அளிக்கப்பட்ட பட்டங்கள் பட்டதாரிகள் சம்பந்தமான விபரங்கள் பின்வருமாறு:-

மொத்தம் 143 பட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றில் பி. ஏ. பட்டம் 66; பி. எஸ். ஸி. பட்டம் 33; வைத்தியப் பட்டங்கள் 44 பட்டதாரிகளில் 38 பேர் விழாவில் ஆஜராய் இருக்கவில்லை.

பட்டமளிப்பு விழா சம்பந்தமாக கால்பேஸ ஹோட்டலில் நடைபெற்ற விருந்தின் போது பேசிய டாக்டர் ஜென்னிங்ஸ இலங்கை சர்வகலாசாலை, கடந்த 5 வருஷ காலத்தில் 645 பட்டங்களை வழங்கி உள்ளதாகக் குறிப்பிட்டார்.

இவற்றில் 11 கௌரவப் பட்டங்கள்.

வீட்டை உடைத்து ரூ. 1733 மதிப்புள்ள சொத்து களவு

கொழும்பு, அக். 19

மௌஞ்ஜர் வீதியில் திரு. ஜே ஏ. டி. பெரேரா என்பவர் வீடடில் இல்லாத சமயத்தில் வீட்டை உடைத்து (செப்டம்பர் 22-ம் தேதி) ரூ 1733 மதிப்புள்ள பொருள்களை களவாடியதாக எம். இஸ்ஸதீன், ஐ. ராஸ்ஸா ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் முதல் எதிரிக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் இரண்டாவது எதிரிக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனையும் நீதிபதியால் விதிக்கப்பட்டது:

ஆசியாவில் பிரான்ஸ், ஹாலந்து அக்கிரமம்

பிரிட்டனைபார்த்தாவது புத்திவரவில்லையா என்கிறார் இந்தியா பிரதிநிதி

பொருளாதாரக் கமிஷனில் அடிமை நாடுகளை கூட்டு அங்கத்தினராகச் சேர்க்க ரஷியாவின் தீர்மானம் தோல்வி

நியூயார்க். அக். 17

ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் ஆசியா பொருளாதார கமிஷனில் ஆசியாவில் ஐரோப்பிய வல்லரசுகளின் கீழ் அடிமைப்பட்டுக்கிடக்கும் குடியேற்ற நாடுகளும் கூட்டு அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட வேண்டுமென்று ஐக்கிய தேச பொருளாதார கமிட்டியில் ரஷியா ஒரு தீர்மானம் கொண்டுவந்தது. இந்தியா உட்பட 13 நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்தன. 19 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தன. 14 நாடுகள் நடுநிலைமை வகித்தன.

ஈராக், லெபானன், பிலிப்பைன், சவூதி அரேபியா, சிரியா, யேமன் முதலிய நாடுகள் ரஷியாவின் தீர்மானத்தை ஆதரித்தன. ஆர்ஜண்டைனா, ஆஸ்திரேலியா, சில்லி, சைனா, டென்மார்க், டொமினிக்கா, லக்சம்பர்க்; நியூஜிலந்து, பெரு சுவீடன், துருக்கி, அமெரிக்கா, உருகுவே முதலிய நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தன வோட்டெடுக்கும் சமயம் 11 நாடுகள் வெளியே கம்பி நீட்டிவிட்டன. அவைகளில் ஒன்று பாக்கிஸ்தான்.

வியட்நாம், இந்தோனேஷிய குடியரசுகள் சார்பாக பிரான்சும் ஹாலந்தும்மனுக்கள்அனுப்பாதிருப்பது குறித்து இந்தியா பிரதிநிதி சமரேந்திரநாத் சென் கண்டித்துப் பேசினார். இது சம்பந்தமாக பிரிட்டன் ஆசியாவிலுள்ள தனது பிரதேசங்களின் உரிமையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதைப் பின்பற்றிடாவது பிரான்சும் ஹாலந்தும் நியாயமான முறையில் நடக்க வேண்டுமென்றும் திரு சென் தெரிவித்தார்.

கமிஷனை சீர்திருத்துவதைவிட இப்பொழுதுள்ள நிலையில் வேலைகளைத் துரிதமாக செய்வதே நல்லது என்று சீனப் பிரதிநிதி தெரிவித்தார்.

ஆசியா பொருளாதார கமிஷனில் மத்திய கிழக்கு நாடுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ரஷியா கொண்டுவந்த மற்றொரு தீர்மானத்திற்கு 7 வோட்டுகள் சாதகமாகவும் 24 வோட்டுகள் பாதகமாகவும் கிடைத்தன. 14 நாடுகள் நடுநிலைமைவகித்தன.

ஆகவே ஐக்கிய தேச பொருளாதாரக் கமிட்டியில் ஆசியா பொருளாதாரக் கமிஷன் கொண்டுவந்த இரு தீர்மானங்களும் தோல்வியுற்றன.

(ராய்ட்டர்)

அட்டர்னி ஜெனரல் மீது நஷ்டஈடு வழக்கு

பதவியிலிருந்து விலக்கியதாக குற்றச்சாட்டு

கொழும்பு, அக். 19

திரு. டி. வி. கிருஷ்ணசுவாமி ஐயங்காரால் தயாரிக்கப்பட்ட மனு இப்பொழுது காலிதல் பொட் நகரைச் சேர்ந்த என். கே. டி. சந்திரசேகரா என்பவரால் அட்டர்னி ஜெனரல் மீது கொழும்பு கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

பொது தர்மகர்த்தாவுக்கு உதவியாளராக 1945-ம் வருடம் அக்டோபர் 14ம் தேதி தமை நியமித்ததாகவும் ஒருவிதமான குற்றமுமின்றி தம்மை 1946-ம் வருடம் செப்டம்பர் 3-ம் தேதி வேலையிலிருந்து நீக்கியதாகவும் இதனால் தாம் அடைந்துள்ள நஷ்டங்களுக்கு ரூ 50,000 நஷ்டஈடாகக் கோரப்பட வேண்டியிருப்பினும் தமது உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்காக தமக்கு ரூ 20 நஷ்டஈடு கொடுத்தால் போதுமென்றும் வழக்காளி தமது சார்பில் தெரிவித்துள்ளார். உதவி கமிஷனர் அதனை ஏற்றுக்கொண்டு சம்மன்ஸ அனுப்ப உத்தரவிட்டு வழக்கை இம்மாதம் 31-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

நமது ஜோஸியப் பகுதி:

ரஷிய அமெரிக்கா தகராறு

[சுகன்யா எழுதுவது]

1947-ம் ஆண்டு அக்டோபர் மீ 18-ம் தேதி தொடக்கம் நவம்பர் மீ 14-ம் தேதி வரைக்கும் செவ்வாயும், சனியும் கடக ராசியில் ஆயிலிய நக்ஷத்திரத்திலிருப்பார்கள் ஒரே ராசியில் ஒரே நக்ஷத்திரததில் இவ்விருவரின் சேர்க்கைஉலகமெங்கும்பல தொல்லைகளைஉண்டுபடுத்தும்.

இந்தக் காலத்தில் ரஷியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் சில முக்கிய தொல்லைகள் ஏற்படும். ரஷியா அமெரிக்காவுக்கு எதிராக போர்க்கோலம் போடவும் எத்தனிக்கும். அமெரிக்காவும் ரஷியாவும் எல்லா இடங்களிலும் மோதுப்படவும் வேண்டி நேரிடும்.

ரஷியா ஐரோப்பா முழுவதையும் தன்வசப்படுத்த எத்தனிக்கும். ரஷியாவுக்கும் பிரான்சுக்குமிடையில் தொல்லைகளுண்டாகும். பிரான்சின் தலைவர்கள் பொதுவுடமைக் கட்சிக்கு மாறான கருமங்களைச் செய்யவும் கூடும்.

இவ்விரு தீய நவக்கோள்களின் சேர்க்கையால் ஜப்பான், இந்தியா, துருக்கி, இத்தாலி முதலிய நாடுகளில் பூகம்பங்களினாலும், பூமிபதிர்ச்சிகளினாலும் ஜீவமோசங்களும், பொருள் நஷடங்களுமுண்டாகும்.

இவ்விருவரின் சேர்க்கையால கிழக்கு நாடுகளுக்கும் பிரித்தானியாவுக்கு மிடையில் சில பல தொல்லைகள் தோன்றி மறையும். கிழக்கு நாடுகளில் உள்நாட்டுப் புரட்சிகளும் ஜீவ மோசங்களும், பஞ்சப் பிணியுமுண்டாகும். பெரியோர்களுக்கு ஜீவ ஆபத்துக்களும் பல தொல்லைகளுமுண்டாகும்.

சனி-செவ்வாயின் சேர்க்கை ஜனநாயகத்திற்கும் பொதுவுடமைக்குமிடையில் யுத்தம் போன்ற தொல்லைகளை வருவிக்கும். சில சில இடங்களில சிறு யுத்தங்களுமுண்டாகும். பொதுவாய் இந்தக் காலம் வரைக்கும் உலகமெங்கும் கிளர்ச்சிகளுண்டாகும்.

இந்த வார தினப்பலன்

ஞாயிறு - அக்டோபர் 19. இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் விவாகத்திற்கும் விசேஷ நாள்.

சந்திர லக்னம்- மிதுனம், கடகம், துலாம், தனுசு, கும்பம், மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகபலனுண்டாம்.

திங்கள். அக்டோபர் 20. இன்று உதயம் விவாகத்திற்கும், புதுக் கணக்குப் பதிதலுக்கும், வியாபாரத்திற்கும், மரவகை செடிவகை நடுவதற்கும், வயல் செய்கை தோட்டச் செய்கைகளுக்கும் சுப முகூர்த்தமுண்டு.

சந்திர லக்னம்- மிதுனம், கடகம், துலாம், தனுசு, கும்பம், மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் விசேஷ பலனுண்டாம்.

செவ்வாய்- அக்டோபர் 21 இன்று எல்லா கருமங்களுக்கும் அசுப தினம்.

சந்திர லக்னம்- மிதுனம், கடகம், துலாம், தனுசு, கும்பம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் அனுகூலமுண்டாம்.

புதன்- அக்டோபர் 22. அஷ்டமி இன்று எல்லாக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் தோஷ தினம்.

சந்திர லக்னம்- மேடம், கடகம், சிங்கம், விருச்சிகம், மகரம் மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

வியாழன்- அக்டேபர் 23 மகா நவமி, சரஸ்வதி பூஜை நவமியாதலால் இன்று தோஷ தினம்.

சந்திர லக்னம்- மேடம், கடகம், சிங்கம், விருச்சிகம், மகரம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் முன்னேற்றமுண்டாம்.

வெள்ளி- அக்டோபர் 24. விஜய தசமி ஸமீ விருக்ஷபூஜை மரண யோகம் - இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷ தினம்.

சந்திர லக்னம்- மேடம், இடபம், சிங்கம், கன்னி, தனுசு, கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணப் பேறுண்டாம்.

சனி- அக்டோபர் 25. மரண யோகம் இன்று எல்லா புதுக் கருமங்களுக்கும் அசுபதினம்.

சந்திர லக்னம்- மேடம், இடபம், சிங்கம், கன்னி, தனுசு, கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் ஜெயமுண்டாம்.

தோணியை உடைத்து பலகைகளைக் களவாடினராம்

புங்குடுதீவு, அக். 17

நயினாதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகலிங்கம் என்பவருக்குச் சொந்தமான தோணி ஒன்றைப் புங்குடுதீவிலே வைத்து உடைத்து அதிலிருந்த பலகைகளைக் களவாடியதாக புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கதிரேசு, கந்தன் வீரவாகு ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

எதிரிகள் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று கூறியதன் மேல் நீதிபதி எதிரிகளை ஜாமீனில் போக விடுத்து வழக்கு விசாரணையை 28-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

ஊர்காவற்றுறை, அக். 17

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சரவணையென்னும் கிராமத்தில் கந்தன் பொன்னன் என்பவருடைய வீடடை அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி ஏரம்பு, கந்தன் கணபதி ஆகிய இருபேரும் நெருப்பு வைத்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு சம்மன்ஸ பிறப்பித்து விசாரணையை வருகிற நவம்பர் மாதம் 6-ம் தேதிக்கென ஒத்திவைத்தார். [ந-நி]

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
என். வயித்திலிங்கம் - கொம்பனி,
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன். 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

பிரசித்தி பெற்ற "ப்வாம் பிராண்ட்"

சமையலுக்கு உபயோகிக்கும்
நெய்
சமையலுக்கும், பொரியலுக்கும் உபயோகிக்க மிகவும் சிறந்தது!
நிகரற்றதென கருதப்பட்டதும் பல பிரமுகர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமான
"ப்வாம் பிராண்ட்" நெய்யை உபயோகியுங்கள்
யாழ்ப்பாணம் சப்-ஏஜெண்டு:
நியூ ஜாப்ஞ ஸ்டோர்ஸ்,
6, மெயின் ஸ்டிரீட், யாழ்ப்பாணம்.
ஏக வினியோகஸ்தர்கள்:-
ஒக்ஸ்போர்ட் ஏஜென்ஸி
தபால் பெட்டி: 852,
டெலிபோன்: 4437 கொழும்பு.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 19-ம் தேதி இந்தப் பத்திரிகை 194ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு, கொழும்பு-மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org